**செ. கு. எண்: 132** **நாள்:17.10.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின்**

**அறிக்கை - 17.10.2019**

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்ட காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. சி. வில்வநாதன்;** பேரணாம்பட்டு காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. வினோத் குமார்;**

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. து. தினேஷ்பாபு;**

கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. செ. நாககுமாரன்;** குளச்சல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. க. நேசையன்;** ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. சு. கோமளகுமார்;**

திண்டுக்கல் மாவட்டம், மாவட்ட தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ம. கணேசன்;**

தருமபுரி மாவட்டம், தருமபுரி இரயில்வே காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. மோகனசுந்தரம்;**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திருமதி க. தேவசங்கரி;**

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. கே. மதுகுமார்;**

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகர காவல் நிலையத்தில் பெண் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திருமதி. பத்மாவதி;** ஓமலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. பி. அய்யந்துரை;** ஆயுதப்படையில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. சிதம்பரம்;** ஆத்தூர் நகர போக்குவரத்துப் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ர. அருணாச்சலம்;**

காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. பாலாஜி;** செய்யூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ந. ரமேஷ்பாபு;**

சென்னை பெருநகரக் காவல், ஜே–13 தரமணி காவல் நிலையத்தில் சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ப. பிரபு;** பாதுகாப்பு சென்னை காவல் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ஜோ. ஆரோக்கியநாதன்** மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. ரா. பார்த்தசாரதி;**

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. த. கனகராஜன்;**

மதுரை மாவட்டம், மதுரை மாநகர ஆயுதப்படையில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ரா. இளங்கோ;** பெண் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திருமதி சகாயராணி;**

கரூர் மாவட்டம், வெங்கமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த **திரு. கை. மதியழகன்;**

----ஆகியோர் உடல் நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. ரா. பாண்டியன்;**

திருவள்ளூர் மாவட்டம், வெங்கல் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த **திரு. கோவிந்தசாமி;**

**.......** ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

உடல் நலக் குறைவு மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்த 25 காவலர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த **25 காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**